# மாநபி போதித்த மனித நேயம்!

இப்னு ஹத்தாது

**“மனித நேயம்”** என்றால் அது கிலோ என்ன விலை? என்று கேட்கும் கால கட்டத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மதப்புரோகிதர்களும், அரசியல் தரகர்களும் இன்று மதத்தின் பெயராலும், வர்ணாசிரமத்தின் பெயராலும், ஜாதிகள், மத்ஹபுகள், இயக்கங்கள் பெயராலும் மனித நேயத்தைக் கீறிக்கிழித்து, கொத்துக் கறியாக ஆக்கி வைத்திருக்கிறார்கள்.

பெரியவர்கள் முதல் பச்சிளம் குழந்தைகள் வரை கொடிய நெருப்பில் தூக்கிப்போட்டு உயிருடன் துடிதுடித்து செத்து மடிவதைப் பார்த்து ரசிக்கும் கல் நெஞ்சம் கொண்டவர்களிடம் மனித நேயத்தை எதிர் பார்க்க முடியுமா? கர்ப்பிணிப் பெண்ணை நிர்வாணமாக்கி அவள் வயிற்றைக கிழித்து சிசுவை சூலாயுதத்தால் குத்தி வெளியில் எடுத்து, எப்பாவமும் அறியாத நிறைவு பெறாத அச்சிசுவை நெருப்பிலிட்டுப் பொசுக்கி ஆனந்தக் கூத்தாடிய கொடியவர்களிடம் மனித நேயத்தின் கடுகுப் பிரமாணத்தையாவது காண முடியுமா? இப்படி மனித நேயம் கழுவில் ஏற்றப்படும் கால கட்டத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இறைவனின் இறுதித் தூதர் மனித வர்க்கத்திற்கு வழிகாட்டிச் சென்ற மனித நேயத்தை - அதன் மிக உன்னத நிலையை அறிந்து கொள்வது மிகவும் உபயோகமாக இருக்கும். இன்றைய முஸ்லிம்களுக்கே அது விடுபட்ட நபிவழியாகி விட்டது என்பதை உணர்த்தும். நபி(ஸல்) அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த காலகட்டத்தை அதிலும் குறிப்பாக அவர்கள் இறைவனால் நபியாக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்கு ஒரே நேர்வழியைப் போதித்துக் கொண்டிருந்த அவர்களின் 40வது வயதிலிருந்து அவர்கள் மரணிக்கும் வரை அதாவது 63வது வயது வரை, அந்த 23 வருட காலகட்டமிருக்கிறதே அது போன்றதொரு ஒரு காலகட்டம் அதன் பின்னர் இதுவரை இருந்ததுமில்லை; இனிமேல் இருக்கப் போவதுமில்லை.

இறைவனையும், அவனது தூதரையும் மனப்பூர்வமாக ஏற்று, சத்தியத்தை - நேர்வழியை நிலைநாட்ட தங்கள் உயிர், பொருள், ஆவி அனைத்தையும் உள்ளம் விரும்பிய நிலையிலேயே தியாகம் செய்ய முன்வந்த மனிதப் புனிதர்கள் ஒரு பக்கம். தாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வாயளவில் சொல்லிக் கொண்டு மனதளவில் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் கடுமையாக வெறுத்துக் கொண்டு, நபி(ஸல்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் ஏட்டிலடங்கா எண்ணற்றத் துன்பங்களைக் கொடுத்துக் கொண்டும், இஸ்லாத்திற்கு விரோதமான சதிகள் பல செய்து கொண்டும், தூய இஸ்லாத்தின் வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக் கட்டையாக இருந்த நயவஞ்சக முஸ்லிம்கள் என்ற முனாஃபிக்குகள் ஒரு பக்கம், இஸ்லாத்தை வேரோடு, வேரடி மண்ணோடு அழித்தொழிக்க - குழி தோண்டிப் புதைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு இரவு பகலாக தூங்காது இஸ்லாத்திற்கு விரோதமாக செயல்பட்ட குறை*ஷி* காஃபிர்கள் என்ற இறை நிராகரிப்பாளர்கள் ஒரு பக்கம்,

இஸ்லாம் அரபு மண்ணில் ஓங்கி வளர்ந்து வருவதால், தங்களின் செல்வாக்குச் சரிந்து வருவதைக் கண்டு சகிக்க முடியாமல், குறை**ஷி** காஃபிர்களுடன் இணைந்து சதிகள் பல செய்து இஸ்லாத்தை வீழ்த்துவதையே தங்கள் குறியாகக் கொண்ட யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஒரு பக்கம் என நபி(ஸல்) அவர்களைச் சுற்றி கடும் பகைவர்களே நிறைந்து காணப்பட்டனர்.

நபி(ஸல்) அவர்களோடு இருந்த உண்மையான நபிதோழர்களைப் போல் - மனிதப் புனிதர்கள் போல், அதன் பின்னர் இதுவரை யாரும் இந்த மண்ணில் பிறக்கவில்லையோ, இதன் பின்னரும் பிறக்கப் போவதில்லையோ அதே போல், அன்று தங்களை முஸ்லிம்கள் என வாயளவில் சொல்லிக் கொண்டு, முஸ்லிம் உம்மத்தில் இருந்து கொண்டு, அதே சமயம் இஸ்லாத்திற்கும் நபி(ஸல்) அவர்களுக்கும் விரோதமாக கடும் சதிகள் துரோகங்கள் செய்து கொண்டிருந்த நயவஞ்சகர்களான முனாஃபிக்குகளைப் போல் கொடியவர்கள் அதன் பின்னர் முஸ்லிம் உம்மத்தில் இதுவரை இருந்ததுமில்லை; இதன் பின்னரும் இருக்கப் போவதுமில்லை. காரணம் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் உள்ளத்தால் கடுமையாக வெறுத்துக் கொண்டு, வெறும் உதட்டில் நேசிப்பதாகக் கூறும் ஒரேயொரு முஸ்லிமையும் முஸ்லிம் உம்மத்தில் இன்று காட்டவே முடியாது.

நபி(ஸல்) அவர்களது காலத்தில் இஸ்லாத்தை அழித்தொழிக்க அல்லும் பகலும் அயராது பாடுபட்ட நயவஞ்சகர்கள், காஃபிர்கள், முஷ்ரிக்குகள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் அன்று தங்களுடைய அந்த முயற்சியில் வெற்றி பெற்று சத்திய மார்க்கம் - நேர்வழி - இஸ்லாம் முறியடிக்கப்பட்டிருந்தால், இன்று நாமெல்லாம் முஸ்லிமாக இருக்க முடியாது. இப்பூமியில் இஸ்லாம் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கும். இதை நபி(ஸல்) அவர்கள், பதுருடைய யுத்த களத்தில் நெற்றியைத் தரையில் வைத்து ஸஜ்தா செய்தவர்களாகச் செய்த பிரார்த்தனை உறுதிப்படுத்துகிறது. அப்படியானால் அன்று இஸ்லாத்திற்கு விரோதமாகச் செயல்பட்ட நயவஞ்சகர்கள், காஃபிர்கள், முஷ்ரிக்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற கேடு கெட்டவர்களை அதன் பின்னர் இவ்வுலகம் இதுவரை கண்டதுமில்லை; இனிமேல் காணப்போவதுமில்லை என்பது சரிதானே!

இன்றைய இஸ்லாத்தின் விரோதிகள் அனைவரும் ஒன்று திரண்டு முழு மூச்சாகப் பாடுபட்டாலும், இஸ்லாத்தை ஒழித்துக் கட்ட அவர்களால் ஒரு போதும் அது முடியவே முடியாது என்று உறுதிபடச் சொல்ல முடியும். இஸ்லாம் நீடித்து நிலைத்து நிற்கும் என்பது உறுதியிலும் உறுதி. எனவே அன்று இஸ்லாத்திற்கு விரோதமாகச் செயல்பட்ட அன்றைய முனாஃபிக், முஷ்ரிக், காஃபிர், யூத, கிறிஸ்தவர்களோடு இன்றைய முனாஃபிக், முஷ்ரிக், காஃபிர், யூத, கிறிஸ்தவர்களை ஒப்பிட்டால் இவர்களை நல்லவர்கள் என்றே சொல்லிவிட முடியும். அதிலும் அன்றைய முஸ்லிம்களாக நடித்த முனாஃபிகள் - நயவஞ்சகர்கள் போன்ற கொடிய நயவஞ்சகர்கள் இன்று முஸ்லிம் சமுதாயத்தில் இல்லை என்றே சொல்லி விட முடியும். இவர்களில் யாருமே இஸ்லாத்தையும், நபி(ஸல்) அவர்களையும் உள்ளத்தால் வெறுத்துக் கொண்டு வெறும் உதட்டளவில் தங்களை முஸ்லிம்கள் என்று கூறுவதில்லை.

அல்லாஹ்வையும், அவனது தூதரையும், அவனது மார்க்கத்தையும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு, சில புரோகித முல்லாக்களின் தவறான **ஷி**ர்க்கான, பித்அத்தான போதனைகளை நம்பி,

முன்னோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கிறார்கள் என்றே சொல்ல முடியும். ஆக எந்தக் கோணத்தில் அலசினாலும், நபி(ஸல்) அவர்களது காலத்தில் இருந்தவர்கள் போன்ற நல்லவர்களும் அதன் பின்னர் இதுவரை இருந்ததில்லை; இதன் பின்னரும் இருக்கப் போவதில்லை. அதே போல் நபி(ஸல்) அவர்களது காலத்தில் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் கொடும் விரோதிகளாக இருந்த முஸ்லிம்களாக நடித்த முனாஃபிக்கள், முஷ்ரிக்கள், காஃபிர்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற கேடுகெட்டவர்கள், அதன் பின்னர் இதுவரை இருந்ததில்லை; இனிமேல் இருக்கப் போவதுமில்லை.

இப்போது நாம் எடுத்துக்கொண்ட அடிப்படையான **"மனித நேயம்"** விஷயத்திற்கு வருவோம். இன்றைய புரோகித முல்லா வர்க்கத்தினர் இஸ்லாத்தின், முஸ்லிம்களின் விரோதிகளாக இனங்காட்டும் யாராக இருந்தாலும் அவர்கள் அன்று நபி(ஸல்) அவர்களது காலத்திலிருந்த இஸ்லாத்தின், முஸ்லிம்களின் விரோதிகளை விட கொடியவர்கள் அல்ல என்பதை மேலே நாம் கண்ட விவரங்களிலிருந்து அறிந்து கொண்டோம். அப்படிப்பட்ட அந்த கொடிய விரோதிகளோடு நபி(ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட **மனித நேய அடிப்படையில்** பழகினார்கள் என்பது வரலாற்றில் மலிந்து காணப்படுகிறது. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

**நபி(ஸல்) அவர்களும் அபூபக்கர்(ரழி) அவர்களும் (ஹிஜ்ரத்தின் போது) பனூதீல் குலத்தைச் சேர்ந்த ஒருவரை (வழி காட்டுவதற்காக) கூலிக்கு அமர்த்தினார்கள். அவர் குறைஷ் காஃபிர்களின் மார்க்கத்தில் இருந்தார் .......**

*அறிவிப்பவர் : ஆயிஷா(ரழி), நூல் : புகாரீ, ர.அ. 2263, 2264*

**"விளைச்சலில் பாதி தரப்படும் என்ற அடிப்படையில், கைபருடை நிலங்களை உழைத்துப் பயிரிட்டுக் கொள்வதற்காக, யூதர்களுக்கு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் வழங்கினார்கள் ........"**

*அறிவிப்பவர் : இப்னு உமர்(ரழி), நூல் : புகாரீ, ர.அ. 2285*

**"....... இப்றாஹீம் நகயீ(ரஹ்) அவர்கள் நபி(ஸல்) அவர்கள் யூதர் ஒருவரிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தவணைக்கு உணவுப் பொருளை வாங்கினார்கள். (அதற்காக) தமது கவசத்தை அடைமானம் வைத்தார்கள் என்று ஆயிஷா(ரழி) அவர்கள் கூறியதாக எமக்கு அஸ்வத்(ரஹ்) அவர்கள் அறிவித்தார்கள்."**

*நூல் : புகாரீ, ர.அ. 2509, 2513*

ஹதீஸ் நூல்களைப் புரட்டினால் இவை போல் இன்னும் பல ஆதாரங்களைப் பார்க்க முடியும். ஆக யூதர்கள், கிறிஸ்தவர்கள், காஃபிர்கள் முஸ்லிம்களுக்கு கொடிய விரோதிகளாக இருந்தும், இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழித்தொழிப்பதிலேயே குறியாக இருந்தும், நபி(ஸல்) அவர்கள் அப்படிப்பட்ட கொடிய விரோதிகளிடமும் மனித நேயத்துடன் பழகினார்கள், அவர்களுடன் வியாபாரம்

மற்றும் கொடுக்கல் வாங்கல் செய்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாக விளங்குகிறது.

**இந்த நிலையில் இன்று அமெரிக்கா, முஸ்லிம்களையும், முஸ்லிம் நாடுகளையும் அழித்தொழிப்பதில் குறியாக இருக்கிறது என்பதற்காக அமெரிக்கப் பொருள்களை புறக்கணியுங்கள் என்று கூறும் மவ்லவி புரோகிதர்கள் நபி வழியைப் பின்பற்றுகிறவர்களா? நபி(ஸல்) போதித்த மனித நேயத்தை மதித்து நடப்பவர்களாக என்பதை நீங்களே சிந்தித்து முடிவெடுங்கள்.**

இன்றைய அமெரிக்க யூத, கிறிஸ்தவர்கள் நபி காலத்து யூத, கிறிஸ்தவர்களை விட கொடியவர்களுமல்ல; இன்றைய முஸ்லிம்கள் நபி காலத்து முஸ்லிம்களைவிட மேலானவர்களுமல்ல; இந்த நிலையில் நபியின் தெளிவான வழி காட்டலைப் புறக்கணித்து விட்டு, ஷைத்தானின் தூண்டுதலின் காரணமாக மனோ இச்சைக்கு ஆளாகி இருக்கும் முஸ்லிம்களின் மனோ நிலைக்கு ஏற்றவாறு அவர்களின் ஆதரவையும், லோகாதாய லாபங்களையும் பெறும் நோக்கோடு அமெரிக்கப் பொருள்களை பகிஷ்கரிக்கச் சொல்லும் மவ்லவி புரோகிதர்கள் நபியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நபிவழியில் - நேர்வழியில் நடக்கின்றனரா? அல்லது ஷைத்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஷைத்தானின் வழியில் - கோணல் வழியில் நடக்கின்றனரா? என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழித்தொழிப்பதிலேயே மிகமிகக் குறியாக இருந்த அன்றைய யூத, கிறிஸ்தவ, குறைஷ் காஃபிர்களுடன் வியாபாரம் செய்யக்கூடாது என்றோ, கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடாது என்றோ, அவர்களுடன் மனித நேயத்துடன் பழகக் கூடாது என்றோ கட்டளையிட்டதாக ஒரு சின்னஞ் சிறு ஆதாரத்தைக்கூட பார்க்க முடியவில்லை. அதற்கு மாறாக நல்ல முறையில், அழகிய பண்புடன், மனித நேய அடிப்படையில் நடந்து கொண்டதற்குத்தான் பல ஆதாரங்கள் கிடைக்கின்றன. இதோ ஒரு மறுக்க முடியாத ஆதாரம்.

நபி(ஸல்) அவர்களின் சத்தியப் பிரசாரம் அரபு அவனியிலே மிக வேகமாக வளர்ந்து வந்தது. அதை தடுத்து நிறுத்திட குறைஷ் காஃபிர்கள் தங்களால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டனர். அவர்களது முயற்சிக்கு மாறாக சத்தியப் பிரசாரம் மேலும் மேலும் வழுவடைந்து வந்தது. நபி(ஸல்) அவர்களுக்கு மண், பெண், பொன் ஆசை, ஆட்சி அதிகாரம் இப்படி எல்லாம் ஆசை வார்த்தைகள் காட்டி, அவர்களின் சத்திய பிரசார்த்தைக் கைவிடும்படி கோரிக்கை வைத்தனர். நபி(ஸல்) அவர்கள், அவர்களின் இந்த ஆசை வார்த்தைகளில் மயங்கவில்லை. வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் கொண்டு வந்து கொடுத்தாலும் சத்தியப் பிரசாரத்தைக் கைவிடப்போவதில்லை என்று உறுதியாகக் கூறி விட்டார்கள்.

குறைஷ் காஃபிர்களின் இப்படிப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றதைக் கண்டு ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று நபி(ஸல்) அவர்களைத் தீர்த்துக்கட்டும் திட்டத்தில் இறங்கி விட்டனர். நபி(ஸல்) அவர்களின் குடும்பமும் குறைஷ் குடும்பத்திலேயே தலை சிறந்த குடும்பமாக இருந்ததால், பின் விளைவாக பெரும் கலவரம் வெடித்து விடக்கூடாது என திட்டமிட்டு, ஒவ்வொரு குடும்பத்திலும்

ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நபி(ஸல்) அவர்களை முடித்து விட வேண்டும் எனத்திட்டம் தீட்டுகிறார்கள்.

அவர்களின் சதித்திட்டங்கள் எல்லாம் நபி(ஸல்) அவர்களுக்குத் தெரிய வருகிறது. மக்காவை விட்டு வெளியேற தேவையான நடவடிக்கைகளில் அவர்களும் ஈடுபடுகிறார்கள். ஆயினும் அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இந்த நிலையில் குறைஷ் காஃபிர்கள் பலரின் பொருள்கள் நபி(ஸல்) அவர்களிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டு இருந்து வந்தன.

இங்கு நாம் ஆழ்ந்து சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம். குறைஷ் காஃபிர்கள் நபி(ஸல்) அவர்களுக்கு எதிராக எப்படி எல்லாம் சதிகள் பல செய்தார்கள்; பாடுபட்டு வந்தார்கள். அவர்களைத் தீர்த்துக் கட்டவே முழுமுயற்சியிலும் ஈடுபட்டு விட்டார்கள். இந்த நிலையிலும் அவர்களது பொருள்கள் அமானிதமாக நபி(ஸல்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால் தமது கொடும் பகைவர்களான அவர்களுடன் நபி(ஸல்) அவர்கள் மனிதநேய அடிப்படையில் எப்படிப்பட்ட சுமூக உறவு வைத்திருந்தால் - நெருங்கிப் பழகி இருந்தால், அந்த குறைஷ் காஃபிர்கள் தங்களது பொருள்களை நபி(ஸல்) அவர்களிடம் அமானிதமாக ஒப்படைத்திருப்பார்கள் என்பதை நிதானமாகச் சிந்தியுங்கள். அவர்கள் எவ்வளவு பெரிய கொடும் பகைவர்களாக இருந்தாலும் அவர்களுடனும் மனிதாபிமானத்துடனும், மனித நேயத்துடனும் நடந்து கொள்வது ஓர் உண்மை முஸ்லிமின் நீங்காக் கடமை என்பதை இதன் மூலம் நபி(ஸல்) அவர்கள் தமது உம்மத்துக்குக் கற்றுத் தந்திருக்கிறார்கள்.

குறைஷ் காஃபிர்கள் நபி(ஸல்) அவர்களைக் கொலை செய்து விட இறுதி முடிவெடுத்து அதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் முனைப்பாகச் செய்து முடித்து விட்டார்கள். எனவே அல்லாஹ்வின் கட்டளைப்படி நபி(ஸல்) அவர்கள் மிகமிக இரகசியமாக மக்காவை விட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது. அல்லாஹ்வின் கட்டளையும் வந்து விட்டது. இப்போது நபி(ஸல்) அவர்கள் ஒரு தர்ம சங்கடமான நிலையில் சிக்கிக் கொண்டார்கள். தங்களிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்ட பொருள்களின் சொந்தக்காரர்களை அழைத்து அவற்றை அவர்களிடம் ஒப்படைத்தால், நபி(ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியேறுகிறார்கள் என்பதை குறைஷ் காஃபிர்கள் அறிந்து கொள்வார்கள். எனவே அதைச் செய்ய முடியாது. அமானிதமாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைக்கத் தவறினால், அமானித மோசடி செய்த குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என அஞ்சினார்கள். எனவே இறுதியாக ஒரு முடிவு எடுத்தார்கள்.

தமது மருமகன் அலீ(ரழி) அவர்களை தமது இடத்தில் அங்கு தங்க வைத்து அமானிதப் பொருள்களின் விபரங்களைக்கூறி அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டு மதீனா வந்து சேரும்படி கட்டளையிட்டு விட்டு, தமது மதீனா ஹிஜ்ரத்தை மேற்கொள்கிறார்கள். அலீ(ரழி) அவர்களும் மக்காவில் தங்கி அமானிதப் பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு 15 தினங்களுக்குப் பிறகு மதீனா சென்றடைகிறார்கள்.

**இந்த இடத்தில் முக்கிய இரண்டு விஷயங்களை உண்மை முஸ்லிம்கள் தங்களின் கவனத்தில் கொண்டு அவை கொண்டு படிப்பினை பெறுவது அவர்கள்மீது கடமையாக இருக்கிறது.**

ஒன்று தங்களின் பரம வைரிகளான குறைஷ் காஃபிர்களுடன் நபி(ஸல்) அவர்கள் எந்த அளவு **மனித நேயத்துடன்** பழகி இருந்தால் அவர்கள் தங்களது பொருள்களை அமானிதமாக நபி(ஸல்) அவர்களிடம் ஒப்படைத்திருப்பார்கள். எனவே நாமும் எப்படிப்பட்ட பரம விரோதியாக இருந்தாலும் அவர்களுடனும் மனித நேயம் போற்ற வேண்டும். இரண்டாவது அமானிதத்தை முறையாகப் பாதுகாத்து உரியவரிடம் ஒப்படைப்பது எந்த அளவு இறைவனால் வற்புறுத்தப்பட்ட விஷயமாக இருந்தால், (பார்க்க 8:27) நபி(ஸல்) அவர்கள் அந்த இக்கட்டான, ஆபத்தான, உயிருக்கே பேராபத்தான நிலையிலும் அமானிதப் பொருள்களை உரியவர்களிடம் சேர்க்க உரிய நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்பதாகும். எனவே நாமும் எந்த நிலையிலும் எக்காரணத்தைச் சொல்லியும் அமானித மோசடி செய்ய முற்படக்கூடாது.

ஆனால் புரோகித மவ்லவிகளின் சிந்தனைப் போக்கு இப்படி இருக்காது. அமானித மோசடி செய்ய புதிய புதிய காரணங்களைக் கற்பனை செய்வார்கள். அன்று இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட ஆபத்தானதொரு நிலை இன்று இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டு, அந்த இன்னல்களை அளிப்பவர்களின் பொருள்கள் முஸ்லிம்களிடம் அமானிதமாக இருக்குமானால், இந்தப் புரோகித மவ்லவிகள் என்ன சட்டம் சொல்வார்கள் தெரியுமா?

இந்தப் பொருள்கள் நமது எதிரிகளுடையதாக இருந்தாலும் இப்போது நம் கைகளில்தான் இருக்கிறது. அவர்கள் நம்மை அழித்தொழிப்பதில் குறியாக இருக்கிறார்கள். எனவே இந்தப் பொருள்கள் மீண்டும் அவர்களது கையில் போய்ச் சேருமானால் இவற்றின் உதவி கொண்டு நம்மை அழிக்கவே மேலும் உத்வேகமாகச் செயல் படுவார்கள். அது நமக்கு ஆபத்தாகவே முடியும். நம் கைகளைக் கொண்டு நம் கண்களைக் குத்திக் கொள்வதா? நாம் சத்தியத்தை நிலைநாட்டப் பாடுபடுகிறோம். அவர்களோ சத்தியத்தை அழித்து அசத்தியத்தை நிலை நாட்டப் பாடுபடுகிறார்கள். இந்த நிலையில் நம் கையிலுள்ள அவர்களின் அமானிதப் பொருளை அவர்களிடம் ஒப்படைத்தால் அது சத்தியத்தை அழித்து அசத்தியத்தை நிலைநாட்டவே பயன்படும். எனவே அவர்களின் அமானிதப் பொருள்களை அவர்களிடம் ஒப்படைக்காமல் நாமே எடுத்துக் கொள்வது குற்றமாகாது. அல்லாஹ் அதற்காக நம்மைத் தண்டிக்க மாட்டான். காரணம் சத்தியத்தை நிலை நாட்டும் நல்ல நோக்கத்துடன் தானே நாம் அமானித மோசடி செய்கிறோம் என்றெல்லாம் சுயவிளக்கம், வியாக்யானம் கொடுத்து, அல்லாஹ்வின் தெளிவான கட்டளைக்கு முரணாக அமானித மோசடி செய்யவே சட்டம் சொல்வார்கள். இன்றைய லோகாதாய முஸ்லிம்களுக்கும் இந்தப் புரோகித மவ்லவிகளின் கோணல் சட்டமே நேரான சட்டமாகத் தெரியும். ஆவலுடன் அதை ஏற்றுக் கொள்வார்கள்.

ஆனால் அன்று இஸ்லாத்திற்கும், நபி(ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட பேராபத்தைப் போன்றதொரு பேராபத்து அதன் பின்னர் இதுவரை இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டதில்லை; இனிமேலும் ஏற்படப் போவதில்லை. ஆயினும் அன்று நபி(ஸல்) அப்படிப்பட்ட பேராபத்தான நிலையிலும் மனித நேயம் போற்றி அமானிதப் பொருள்களை உரியவர்களிடம், அவர்கள் தங்களின் உயிருக்கே உலைவைக்க முற்பட்ட நிலையிலும் அவர்களிடம் ஒப்படைத்து அமானிதத்தைக் காப்பாற்றினார்கள். காரணம் அமானிதத்தை உரியவர்களிடம் ஒப்படைப்பது அந்த அளவு இறைவனால்

வலியுறுத்தப்பட்ட கட்டளை என்பதை உரிய விதத்தில் மதித்து நடந்தார்கள் நபி(ஸல்) அவர்கள். இங்கு மனித நேயத்திற்கும் மாசு ஏற்படவில்லை.

ஆனால் இன்றைய புரோகித மவ்லவிகளின் கற்பனை வளம் மனித நேயத்தையும், அமானிதத்தையும் குழிதோண்டி புதைக்கும் நிலையிலேயே இருக்கிறது. தர்கா, மத்ஹபு, தரீக்கா முகல்லிது மவ்லவி புரோகிதர்களை விட்டு விடுவோம். காரணம் அவர்கள் இஜ்மா, கியாஸ் என்ற பெயரால் நேர்வழி விட்டு கோணல் வழிகளில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

குர்ஆன், ஹதீஸ் போதனைப்படி நடக்கிறோம். நாங்கள் தவ்ஹீத்வாதிகள் என்று பீற்றிக் கொள்வோரே, கடும் எதிரிகளான யூதர்களுடனும் நபி(ஸல்) அவர்கள் மனித நேயம் மதித்து நடந்தார்கள். அவர்களோடு வியாபாரம் மற்றும் கொடுக்கல் வாங்கள் செய்தார்கள். அவர்களது அமானிதப் பொருள்களை முறைப்படி அவர்களிடமே ஒப்படைத்தார்கள் போன்ற தெளிவான மனித நேய வழி காட்டலுக்கு முரணாக அமெரிக்க பிரிட்டன் பொருள்களை வாங்கக் கூடாது, அவர்களுடன் வியாபார தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என ஃபத்வா - மார்க்கத்தீர்ப்பு கொடுத்து மனித நேயத்தை மண்மூடச் செய்ததோடு, நல்லதொரு வியாபார வாய்ப்பையும் முஸ்லிம்களை இழக்கச் செய்தார்கள்.

நபி(ஸல்) அவர்களின் அழகிய நடைமுறைக்கு முரணாக ஷைத்தானின் தூண்டுதலினால் ஏற்பட்டுள்ள மக்களின் மனோ இச்சைக்கு ஏற்றவாறு மார்க்கச் சட்டம் சொல்லி மக்களை வழிகெடுத்து, இந்தப் புரோகிதர்கள் சுய ஆதாயம் அடைந்து வருகிறார்கள். இது மிகையான கூற்று அல்ல. இந்த தவ்ஹீத் மவ்லவி புரோகிதர்கள் தங்களின் சுய இலாபத்திற்காக எவ்வளவு பெரிய அமானித மோசடியையும் செய்யத் துணிவார்கள் என்பதற்கு இதோ அவரின் கையெழுத்துடன் உள்ள சான்றிதழ்.

**TAMIL NADU MUSLIM MUNNETRA KAZHAGAM**

**தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்**

தலைமையகம்: முதல் மாடி, 19 இப்ராஹிம்ஜி 2வது சந்து, சென்னை - 600 001. ✆ 5247824
Head Quarters: I Floor, 19 Ibrahimji Sahib 2nd Lane, Chennai - 600 001. Tele Fax: 5247824

2

இது தவிர எதிர்காலத்தில் முழு நேரப் பணியாளர்களுக்காக மாதம் தோறும் ரூ 10,000மும், பாதுகாப்பு பணிகளுக்காக ரூ 15,000மும் கூடுதல் செலவுகளாக ஏற்படும்.

சவூதி மற்றும் வாழும் சகோதரர்கள் இந்தச் சேவைச் சரிகட்ட, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்திற்கு நிரந்தர வருமானம் ஏற்படுத்துவதற்காக ஒரு திட்டம் தீட்டியுள்ளார்கள். ரூ 1 கோடி நிதி திரட்டி, அந்த நிதியைக் கொண்டு மாதம் சுமார் 1 இலட்சம் வருவாய் தரும் கட்டடத்தை சென்னையில் வாங்குவதுதான் இந்தத் திட்டம். இதற்கான முதல் கட்டமாக, சென்னை ராயப்பேட்டை நெடுஞ்சாலையில், ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அடுத்துள்ள [illegible] காம்ப்ளெக்ஸில் இரண்டு அலுவலக பிளாட்களை வாங்குவதற்கு அட்வான்ஸ் கொடுத்துள்ளோம். இந்த அலுவலகத்தில் ஒன்று 975 சதுர அடி ஆகும்; மற்றொன்று 1047 சதுர அடியாகும். இதன் விலை ரூ 65 இலட்சம் ஆகும். மாதம் இதன் மூலம் சுமார் 70,000 வாடகை வரும். இது தவிர இன்னொரு இடத்தையும் கழகத்தின் அலுவலகத்திற்கு சுமார் ரூ 40 இலட்சம் அளவில் பார்த்து வருகின்றோம். இந்தக் கட்டடங்கள் மற்றும் அவற்றிலிருந்து வரும் வருமானங்களை பராமரிக்க 'முஸ்லிம் டிரஸ்ட்' என்ற பெயரில் ஒரு அறக்கட்டளையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சேவை அவசியம் தேவை என்று கருதும் அன்பர்கள் மிக தாராளமான நிதியுதவி செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் ஈருலக நன்மைகளை நம் அனைவருக்கும் தந்தருள்வானாக.

அன்புடன்

மௌலவி பி. ஜைனுல் ஆபிதீன்
(அமைப்பாளர்)

பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ்
(தலைவர்)

குறிப்பு: தாங்கள் நன்கொடைகளை "**MUSLIM TRUST**" என்ற பெயரில் டிராப்ட் எடுத்து அனுப்பவும்.
வங்கிக் கணக்கு எண்: 667, UCO Bank, Purasawalkam Branch, Chennai - 600 007.

பண வசூலுக்காக தவ்ஹீத் மவ்லவி கையெழுத்திட்டுள்ள கடிதத்தில், பணம் வசூல் செய்யப்பட்டது த.மு.மு.கவுக்காக என்பதும், பணம் கொடுத்தவர்களும் த.மு.மு.க.வுக்காகவே கொடுத்துள்ளனர் என்பதும், **“முஸ்லிம் டிரஸ்ட்”** அமைக்கப்பட்டதும் த.மு.மு.கவுக்குரிய சொத்துக்களை பராமரிக்க மட்டுமே என்பதும் தெள்ளத்தெளிவாக, உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையா என்பது போல் இக்கடிதத்திற்கு தவ்ஹீத் மவ்லவியின் மேலதிக விளக்கம் எதுவும் தேவையா? இங்கு இவர் நபிவழியில் நடப்பதாகச் சொல்வதை நிலைநாட்டியுள்ளாரா? அல்லது அமானித மோசடியில் மன்னராகத் திகழ்கிறாரா?

தனது அமானித மோசடியை நிலைநாட்ட நாம் மேலே எழுதி இருப்பதுபோல் தனது சொந்த விளக்கம் வியாக்யானங்களைச் சொல்லி தனது ஆதரவாளர்களை மடையர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார். அவரது ஆதரவாளர்களும் தாங்கள், தங்கள் சுய சிந்தனையை தவ்ஹீத் மவ்லவியிடம் அடகு வைத்துள்ள மடையர்கள் தான் என்பதை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பணம் கொடுத்தவர்கள் தனக்காகக் கொடுத்ததாக ஓர் அப்பட்டமான பொய்யைக் கூறுகிறார். அவர் கையெழுத்திட்டுள்ள கடிதத்திலுள்ள **“தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சேவை அவசியம் தேவை என்று கருதும் அன்பர்கள் மிக தாராளமாக நிதியுதவி செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்’** என்ற வாசகமே அவர் பொய்யர்தான் என்பதை உறுதிப்படுத்துகிறது. வசூலிக்கப்பட்ட பணம் தவ்ஹீத் மவ்லவிக்கு என்றோ, தவ்ஹீத் சேவைக்கு என்றோ வசூலிக்கப்படவில்லை. மாறாக த.மு.மு.க. சேவைக்கென்றே வசூலிக்கப்பட்டதாக உறுதிப்படுத்துகிறது.

இக்கடிதத்தைக்காட்டி அவரின் மெகா அமானித மோசடியை இடித்துக் காட்டியவர்களிடம் தவ்ஹீத் மவ்லவி மழுப்பிய மழுப்பல் என்ன தெரியுமா? அரங்கம் என்றும் அந்தரங்கம் என்றும் ஒவ்வொரு விஷயத்திலும் உண்டு. இதிலுள்ள அந்தரங்கத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள் என மழுப்பியுள்ளார். பணம் கொடுத்தவர்கள் அவர் கூறும் அந்தரங்கம் தெரியாமல்தான் கொடுத்துள்ளனர். அரங்கம் மட்டும்தான் அவர்களுக்குத் தெரியும். எனவே அரங்கத்தில் உள்ள படிதான் அமானிதம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் இப்போது கூறும் அந்தரங்கம் பணம் கொடுத்தவர்கள் அறியாத விஷயம். எனவே அது அவர்களைக் கட்டுப்படுத்தாது.

மேலும் இந்த தவ்ஹீத் மவ்லவி கூறும் அரங்கம், அந்தரங்கம் இரகசியத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். தர்கா, தரீக்கா, மத்ஹபு புரோகித மவ்லவிகள் மக்களை, ஒவ்வொரு விஷயத்திற்கும் ழாஹிர் அர்த்தமும், பாத்தின் அர்த்தமும் உண்டு என்று கூறி குர்ஆனிலும், ஹதீஸிலும் தெள்ளத் தெளிவாக நேரடியாக இருக்கும் அர்த்தத்தை மறைத்து இவர்களின் சொந்த நலனுக்காக கற்பனையாகச் சொல்லும் கோணல் வழியை நிலை நாட்டுவது போல், இந்த தவ்ஹீத் மவ்லவி இப்போது இந்த ழாஹிர், பாத்தின் அரபு வார்த்தைகளை தமிழாக்கி அரங்கம், அந்தரங்கம் என்று கூறி ஏமாற்றி இருக்கிறார். எனவே அவர் அந்தரங்கம் என்று கூறி இருப்பது அவரது கோணல் வழி - வழிகேடு என்பதை சிறிது சுய சிந்தனையுள்ளவனும் புரிந்து கொள்ள முடியும். அவரும் மக்களை ஏமாற்றி வஞ்சிக்கும் புரோகிதர்தான் என்பதையும் விளங்க முடியும்.

த.மு.மு.கவுக்குரிய சொத்துக்களையும், டிரஸ்ட்டையும் தவ்ஹீத் மவ்லவி அமானித மோசடி செய்ய, இந்த தவ்ஹீத் மவ்லவி நபி(ஸல்) அவர்களைவிட உயர்ந்தவருமல்ல; த.மு.மு.க.வினர் குறைஷ் காஃபிர்களை விட மோசமானவர்களுமல்ல. இவரின் வார்த்தை ஜாலத்தில் மயங்கி இவரின் அமானித மோசடியில் துணை நிற்கும் டிரஸ்ட் உறுப்பினர்கள். நாளை மறுமையில் அல்லாஹ்விடம் வகையாக மாட்டுவார்கள் என்பதை மனதில் இருத்திக் கொள்ளட்டும். த.மு.மு.க.வுக்குரிய சொத்துக்களை, டிரஸ்டை அபகரித்து அமானித மோசடி செய்ய, தனது குருட்டுப் பக்தர்களை ஏமாற்ற அவர் கூறி வரும் காரணம் அதை விட வேடிக்கையானது.

த.மு.மு.க.வினர் தவ்ஹீது கொள்கையை வெறுக்கின்றனர். தவ்ஹீது கொள்கையால் த.மு.மு.கவுக்கு பின்னடைவு ஏற்படுகிறது என நினைக்கின்றனர். தவ்ஹீது கொள்கையை வெறுக்கும் அவர்களுடன் இணைந்து செயல்பட முடியுமா? அதனால்தான் சொத்துக்களையும், டிரஸ்டையும் அபகரித்துக் கொண்டு

வெளியேறி விட்டேன் என்று கூறி தனது பக்தர்களுக்கு தவ்ஹீத் வெறி ஏற்றுகிறார்.

த.மு.மு.க.வில் தர்காகாரர்களும் இருக்கலாம், மத்ஹபுகாரர்களும் இருக்கலாம், தொழுகை இல்லாதவர்களும் இருக்கலாம், குடிகாரர்களும் இருக்கலாம், முஸ்லிம் என்று சொல்லிக் கொள்ளும் அனைவரும் த.மு.மு.கவில் இருக்கலாம் என கொள்கை(?) வகுத்தவறே சாட்சாத் தவ்ஹீத் மவ்லவிதான்.

மதசார்பற்ற அரசு என்றால் அரசு நிகழ்ச்சிகளில் ஐயரைக் கூப்பிட்டு பூஜை செய்வது போல், ஹஜ்ரத்தை அழைத்து ஃபாத்திஹாவும் ஓதவேண்டும். கப்ருகளை முஸ்லிம் அல்லாதவர்கள் இடிக்க முற்பட்டால் த.மு.மு.கவினராகிய நாங்கள் முன்னால் நின்று அதைத் தடுப்போம் என்றெல்லாம் மேடைக்கு மேடை கொள்கை முழக்கம்(?) செய்த அதே தவ்ஹீத் மவ்லவி இப்போது த.மு.மு.க. தவ்ஹீத் கொள்கைக்கு முரணாக இருக்கிறது என்கிறார். இதையும் அவரது குருட்டுப் பக்தர்கள் ஏற்கிறார்கள்.

அவர் த.மு.மு.க.வை விட்டு வெளியேறும் முன்னர் உணர்வு வார இதழில் தவ்ஹீத் கொள்கையை நிலைநாட்டி ஒரு கட்டுரையோ, ஒரு கேள்வி - பதிலோ இடம் பெற்றுள்ளதாகக் காட்ட முடியுமா? மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல அவரது சூன்யப் பேச்சில், அவரது குருட்டுப் பக்தர்கள் கட்டுண்டுக் கிடப்பதால்தான், சிலர் அவரை தஜ்ஜால் என வர்ணிக்கின்றனர். இதோ அப்படியொரு கடிதம்.

அந்நஜாத் ஆசிரியருக்கு!

ஏப்ரல் மாத இதழில் தஜ்ஜால் முதலியவைகள் இந்தோனி**ஷி**யா தீவுகளில் இருக்கலாம் என்று ஆராயப்பட்டுள்ளது. ஆனால் அச்சனியன் தமிழ்நாட்டில்தான் அலைந்து கொண்டிருக்கிறது. அப்பிசாசு வாய்க்கு வந்ததையெல்லாம் உளறி, ஆணவத்தின் உச்சியில் இருந்து கொண்டு பல கூட்டங்களை உருவாக்கி வழிகெடுத்துக் கொண்டிருக்கிறது. அம்மூதேவியை உலகிற்கு அறிமுகப்படுத்தி **"Famous"** ஆக்கியது தங்கள் பத்திரிக்கை வாயிலாகத்தான். இதற்காகவும் தாங்கள் மறுமையில் வினவப்படுவீர்கள். வல்ல அல்லாஹ்விடம் எப்படி **"Defend"** பண்ணுவீர்கள்?

**அப்துல்லாஹ் ஹாரூன், 80, மொன்னி தெரு, விருதுநகர்.**

தனது வசீகர, சூனியப் பேச்சால் நேர்வழியை கோணல் வழியாக்கி வழிகேட்டின் பக்கம் மக்களை அழைத்துச் செல்வதில் அசகாய சூரராக இருப்பதால் இப்படி மக்களால் அடையாளம் காணப்படுகிறார். அவர் தன்னைத்தானே அபூ ஜஹ்லைவிடக் கொடியவன் என்று பிரகடனப்படுத்தியது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். அவர் 1986ல் நம்மோடு வந்து இணையும் போது ஒரே உம்மத் - ஒரே சமுதாயம் - ஒரே இயக்கம் என்ற பேருண்மையை ஒப்புக் கொண்டும், புரோகிதமற்ற சமத்துவ சகோதரத்துவ சமநிலைச் சமுதாயம் அமைய பாடுபடுவதை ஒப்புக்கொண்டும், வாக்குறுதி அளித்தும் வந்ததால் நம்முடன் இணைத்துக் கொண்டோம். அவரது உள்ளத்தில் இருந்த கபட திட்டத்தை நாம் அறிந்திருக்கவில்லை. மக்களை வழிகெடுக்கும் அவரை சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்திய

பாவத்திற்காகத்தான், இப்போது தொடர்ந்து அவரது முகத்திரையைக் கிழித்து அவரது சாயத்தை வெளுக்க வைக்கிறோம். எல்லாம் வல்ல அல்லாஹ் நாம் அறியாது அன்று செய்த அந்தக் குற்றத்தை மன்னிக்க அவனிடமே மன்றாடுகிறோம்.

த.மு.மு.கவுக்குரிய சொத்துக்களையும், அதற்கென்றே பதியப்பட்ட முஸ்லிம் டிரஸ்ட்டையும் மோசடியாக அபகரித்து வாயில் போட்டுக் கொண்டவர், மெகா அமானித மோசடியாளர், மற்றவர்களை அமானித மோசடி செய்ததாக நாக் கூசாமல் அவதூறு பரப்புவதில் கொயபல்ஸை தோற்கடித்து விடுவார்.

இதோ பாருங்கள் :

29.7.87 விழுப்புரம் சகோதரர் நூருல் அமீனுக்கு தவ்ஹீத் புரோகித மவ்லவி எழுதிய கடிதத்தில்,

> **“பெரும் செல்வந்தர்களிடம் 50 ஆயிரம் என்ற ரீதியில் பல இலட்சங்களுக்குச் சொத்து வாங்கி, இவர் பணம் ஏதும் போடாமல் தன்னையும் பங்காளியாக அதில் சேர்த்துக் கொண்டது உண்மை (இது அந்த செல்வந்தர்களின் சம்மதத்துடன்தான் செய்யப்பட்டுள்ளது) எனினும் நஜாத் டிரஸ்ட் என்ற பெயரைப் பயன்படுத்தியே இந்த பல லட்சங்களைத் திரட்டியுள்ளார். இதுவும் மறுக்க முடியாத உண்மை”.**

த.மு.மு.கவுக் கென்றே **‘முஸ்லிம் டிரஸ்ட்’** என்ற பெயரில் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வாங்கப்பட்ட சொத்துக்களை அபகரித்து மெகா அமானித மோசடி செய்யும் தவ்ஹீத் புரோகித மவ்லவி, அந்நஜாத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாமல், தனியாக “நஜாத் பஜார் டிரஸ்ட்’ என்ற பெயரில் வாங்கப்பட்ட சொத்தை நஜாத் டிரஸ்ட் என்ற பெயரில் வாங்கியதாக அவதூறு பரப்பியுள்ளார்.

அடுத்து எந்தச் செல்வந்தர்கள் பணம் போட்டார்களோ அவர்களின் சம்மதத்துடன்தான் எம்மையும் பங்காளியாக சேர்த்துக் கொள்ளப்பட்டது என்று உண்மையை அவரே ஒப்புக் கொண்டுள்ளார். எனவே அவரின் ஆதரவாளர்களில் கொஞ்சத்திற்கு கொஞ்சமாவது சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கள், **“என்ன ஹஜ்ரத்(?) பணம் போட்டவர்களின் சம்மதத்துடன்தான் அபூ அப்தில்லாஹ் பங்காளி ஆக்கப்பட்டார் என்று நீங்களே எழுதி விட்டு அதை அமானித மோசடி என்கிறீர்களே? என்று மடக்கிக் கேட்டுள்ளனர்.**

அதன் பின்னர் சுதாரித்துக் கொண்டு **1988** பிப்ரவரி **‘புரட்சி மின்னல்’ 120**ம் பக்கத்தில் **“அடுத்தவருக்குச் சொந்தமானதை தன்னுடையதாக்கிக் கொண்டதும், அமானித மோசடியும்தான் பிளவு ஏற்பட முக்கிய காரணம். இதை எங்கேயும் நான் நிரூபிக்க முடியும் என்பதை உறுதியாகக் கூறுகிறேன்”** என்று மழுப்பலாக எழுதி தனது குருட்டு பக்தர்களை தக்க வைத்துக் கொண்டார். இதுவரை அதை நிரூபிக்க முன் வரவில்லை.

அகிலம் சிலர் மொட்டையாக அமானித மோசடி என்றால் எப்படி? அமானித மோசடி செய்யப்பட்ட

பொருள் எது? யாருக்குச் சொந்தம்? எதை அபூ அப்தில்லாஹ் அமானித மோசடி செய்து விட்டார்? என்று கேட்டதற்கு தவ்ஹீத் புரோகித மவ்லவியிடம் பதில் இல்லை. மழுப்பல் மன்னர் மழுப்பிக் கொண்டே இருக்கிறார். பின்னர், அதிலிருந்து அந்தர் பல்டி அடுத்து **24.3.1999**ல் கோவை வெடி குண்டு வழக்கை விசாரித்து **SIT, DSP**க்கு முன்னிலையில் அந்த வழக்கிற்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத எம்மை இழுத்து,

> **“பத்திரிகைக்காக வாங்கப்பட்ட சொத்தை பொருளாளர் (அபூ அப்தில்லாஹ்) தன் பெயரிலேயே பதிவு செய்து கொண்டதால், அந்த துரோகத்தைப் பொறுக்க முடியாமல் நான் நஜாத் பத்திரிக்கையிலிருந்து ஒரு வருடத்திலேயே வெளியேறி விட்டேன்”** என்று கொயபல்ஸையே தூக்கிச் சாப்பிடும் விதமாக அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விட்டுள்ளார்.

நமக்கு இந்தச் செய்தி கிடைத்ததிலிருந்து அந்த சொத்து எங்குள்ளது? என்று எமது பெயரில் பதிவு செய்யப்பட்டது? என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்று வரை பதில் சொல்லும் யோக்கியதை தவ்ஹீத் மவ்லவிக்கு இல்லை. இந்த லட்சணத்தில், **உணர்வு** மே 20-26, 2005 பக்கம் 9ல் **“இது போன்ற வாதத்தை எடுத்து வைப்பதென்றால் அதற்கான சான்றுகளை எடுத்துக் காட்டி நிரூபிக்க வேண்டும்”** என்று தனது பக்க அநியாயத்தை நிலைநாட்ட எழுதியுள்ளார்.

சாதாரண ஒரு வாதத்திற்கே அதற்கான சான்றுகளைக் கேட்பவர், அமானித மோசடிக் குற்றச்சாட்டை எம்மீது சுமத்துகிறவர் அதற்கான சான்றுகளை எடுத்துக்காட்டி நிரூபிக்கக் கடமைப்பட்டவரா? இல்லை? அப்படி இது வரை நிரூபிக்கத் தவறிக் கொண்டிருப்பவர் பச்சைப் பொய்யனும், அயோக்கியனும், அமானித மோசடியாளர்களிலெல்லாம் கடைந்தெடுத்த அமானித மோசடிக்காரன் என்பதும் நிரூபணமாகிறதா இல்லையா? எமது பெயரில் பதிவு செய்யப்பட்ட சொத்தைக் காட்டச் சொல்லி, நீதி மன்றத்தில் வழக்கு நடக்கிறது. அதில் தனது வாதத்திறமையை எப்படிக் காட்டுகிறார் என்று பார்க்கலாம்.

ஒரு வேளை தனது சூன்யம் நிறைந்த வாதத்திறமையால் நீதிபதியையும் மயக்கலாம். ஆனால் சர்வ வல்லமை மிக்க இறைவனை தனது வாதத்தால் மயக்க முடியாது என்பதை அறியாதிருக்கிறார். அல்குர்ஆன் அல்பகரா 2:204, 205, 206 இறைவாக்குகளைப் படித்துப் பாருங்கள். நபி(ஸல்) அவர்களையே தனது பேச்சு வன்மையால் மயக்கக் கூடியவன் இருக்கிறான் எனும் போது அப்பாவி பொது மக்களை தனது சூன்யம் நிறைந்த வசீகரப் பேச்சால் மயக்குவதற்கு கேட்கவா வேண்டும்.

அதிலும் இந்த தவ்ஹீத் மவ்லவியிடம் இருக்கும் அலாதியான மிகவும் கேடுகெட்ட குணம், தான் செய்யும் அத்தனை அயோக்கியத்தனங்களையும், அமானித மோசடிகளையும், இன்னும் பல பெரும் பாவங்களையும் மிக எளிதாக மற்றவர்கள்மீது சுமத்தி தனது சூன்யம் நிறைந்த வசீகர மாயாஜால பேச்சுக்களால் அப்பாவி மக்களை நம்ப வைப்பதில் மன்னாதி மன்னன் என்பதாகும்.

அவர் உண்மையிலேயே இறையச்சம் உள்ளவராக இருந்தால், அல்லாஹ்மீதும், மறுமைமீதும் உறுதியான

நம்பிக்கை உடையவராக இருந்தால் 4:112 மற்றும் 33:58 இறைவாக்குகளைப் பார்த்து உள்ளம் நடுநடுங்கி இருப்பார். அந்த இறைவாக்குகள் வருமாறு :

> **எவன் ஒரு தவறையோ அல்லது பாவத்தையோ சம்பாதித்து விட்டு அப்பால் அதனை ஒரு நிராபராதிமீது வீசி விடுகிறானோ அவன் நிச்சயமாக அவதூறையும், பகிரங்கமான பாவத்தையும் சுமந்து கொள்கிறான்.**

*அல்குர்ஆன் 4:112*

> **விசுவாசம் கொண்ட ஆண்களையும், விசுவாசம் கொண்ட பெண்களையும் செய்யாத (எதையும் செய்ததாகக்) கூறி எவர் நோவினை செய்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாக அவதூறையும், வெளிப்படையான பாவத்தையுமே சுமந்து கொள்கிறார்கள்.**

*அல்குர்ஆன் 33:58*

ஆனால் இவர் தொடர்ந்து பாவச் செயல்களில் மூழ்கி இருப்பதால், புரோகிதத்தை நிலைநாட்ட முற்படுவதால் இறைவாக்கு 5:13 கூறுவதுபோல் உள்ளம் இறுகி விட்டதால் இதுபோன்ற இறைக்கட்டளைகள் இவருக்கு உணர்வைத் தராது போலும்.

ஆக புரோகித மவ்லவிகளிடமிருந்து சத்தியத்தை - நேர்வழியை நிலைநாட்டத்துணை நிற்கும் மனித நேய பண்பாட்டையோ, அமானிதத்தைப் பேணிக்காக்கும் பெருந்தன்மையையோ ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் சமுதாயத்தைக் கூறுபோட்டுச் சுரண்டி கொழுப்பதற்காக மனித நேயத்தைக் கீறிக்கிழித்துக் குதறுவதிலேயே குறியாக இருப்பார்கள். அப்பட்டமான அமானித மோசடிகளைச் செய்து பிறரது சொத்தை அபகரித்து அதில் குளிர் காயவே விரும்புவார்கள்.

நபி(ஸல்) அவர்கள் அழகிய முறையில் போதித்து நிலை நாட்டிய மனித நேயத்திற்கும், அமானிதத்தைப் பேணிப் பாதுகாத்து உரியவர்களிடம் அவர்கள் பரம வைரிகளாக இருந்தாலும் ஒப்படைக்கும் உயர் குணத்திற்கும் புரோகித மவ்லவிகள் ஒரு போதும் ஒத்துவர மாட்டார்கள். அவற்றிற்கு மாறு செய்வதிலேயே குறியாக இருப்பார்கள். இதை அவர்களின் பிடியில் சிக்கி இருக்கும் அப்பாவி பக்தர்கள் உணரும் காலமே பொற்காலமாகும்.

2005 அந்நஜாத்